3. துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சி நிரலில் காணும் அடுத்த அலுவல் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதாகும்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 5-வது விதியைச் சேர்ந்த (4) துணை விதியின் கீழ், இப்பதவிக்கு முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வர்களின் பெயர்களையும், அவர்களின் பெயர்களை முன்மொழிந்தவர்கள் வழி மொழிந்தவர்களின் பெயர்களையும் முதற்கண் இந்த அவையில் நான் படிக்க வேண்டும். அவர்கள் :

நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்

திரு. ம. பொ. சிவஞானம்

திரு. ம. பொ. சிவஞானம்

முன்மொழிந்தவர்

திரு. என். வி. நடராசன்

திரு. மன்னை பி. நாராயண சாமி

வழி மொழிந்தவர்

திரு. ஏ. பி. ஜனார்த்தனம்

திரு. ஜி. பராங்குசம்

தேர்தலுக்கு ஓர் உறுப்பினரின் பெயர் மட்டுமே முன் மொழியப்பட்டுள்ள தால், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக நான் அறிவிக்கிறேன்.

4. துணைத் தலைவருக்குப் பாராட்டுரைகள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இன்று ஒரு மகிழ்ச்சிகரமான நாள் என்று சொன்னால் அது மிகையாகாது. கால மெல்லாம் தன்னுடைய வாழ்க்கையைப் பொதுப்பணிக்கென்று செலவிட்டுக் கொண்டிருப்பவரும், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் தனக்கென ஒரு தனி வரலாற்றைப் படைத்திட்டவரும், தமிழ் மொழியுடைய வளர்ச்சிக் கட்டங் களில் ஒவ்வொரு கட்டத்திலும் தனக்கு ஒரு தனியிடத்தைப் பெற்றிருப்பவரு மான சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் இந்தப் பெருமைக்குரிய அவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இந்த